15.12.2025.

## கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

## விழுப்புரம்.

## SC No. 20/2019

அ.சா.22

**பெயர். திரு.மைக்கேல் இருதயராஜ்**

சாட்சி மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அரசு தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி.**

பின்பு 19/09/2018 ந் தேதி சாட்சிகளை விசாரணை செய்ததில், இதச பிரிவு 302, பிரிவிலிருந்து 120(பி), 449, 302, 302 r/w 109 இ.த.ச-ன் கீழ் ஒரு பிரிவு மற்ற அறிக்கை தயார் செய்துள்ளார். அந்தப் பிரிவு மாற்ற அறிக்கை அ.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 30/06/2018 -ம் தேதி இறந்த அப்துல் ஜபாரின் கரும்பு தோட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட 10 சைஸ் அளவிலான விகேசி பிரைட் என்ற எழுத்துள்ள பிரவுன் கலர் ஒரு ஜோடி செருப்பை, படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். அந்தப் படிவம் 95 அ.சா.ஆ. 22 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02/08/2018-ம் தேதி காலை 10:30 மணிக்கு அப்துல் ஜபாரின் கரும்புத் தோட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட வெளிர் பச்சை நிற ரத்தக்கறை படிந்த அரைக்கை ஜாக்கெட் 1 படிவம் 95 மூலம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த படிவம் 95 அ.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22/08/2018-ம் தேதி எதிரி மோகன் வீட்டின் அருகில் உள்ள மண் குவியலில் இருந்து எடுக்கப்பட்ட கத்தி - 1, சாம்சங் galaxy செல்போன் - 1 ஆகியவைகளை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். அந்த படிவம் 95 அ.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே தேதியில் கைப்பற்றப்பட்ட இன்னோவா காரை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு

அனுப்பியுள்ளார். அந்தப் படிவம் 95 அ.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றே எதிரி ரவி எடுத்து ஆஜர் செய்த கத்தி-1, பல்சர் மோட்டார் சைக்கிள் - 1 ஆகியவைகளை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். அந்த படிவம் 95 அ.சா.ஆ.26 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27/06/2018 தேதியில் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட ரத்த கறை படிந்த சிமெண்ட் காரை(7), ரத்த கறை படியாத சிமெண்ட் காரை சிறிதளவு (8), மற்றும் 28/06/2018-ம் தேதி பிரேத பரிசோதனையின் போது சேகரம் செய்யப்பட்ட சட்டை- (1), பனியன் - (2), பிரவுன் கலர் பேன்ட் - (3), சம்பவ இடத்தின் அருகில் இருந்து எடுக்கப்பட்ட முடிகள் - (4), இறந்து போனவரின் இருக்கையை ஒட்டியிருந்த முடிகள் - (5), இறந்து போனவரின் தலையில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் - (6), ஆகியவைகளை 2 பக்கங்கள் கொண்ட படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். அந்த படிவம் 95 அ.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31/08/2018 ஆம் தேதி அப்துல் ஜப்பார் நிலத்தில் அருகில் எதிரி திலிப் குமார் என்கிற திலிப் எடுத்து ஆஜர் செய்த கத்தி ஒன்றை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். அந்த படிவம் 95 அ.சா.ஆ.28 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு நீதிமன்றத்தில் இருந்து வழக்கு சொத்துக்களை பரிசோதனை செய்து, ஆய்வறிக்கை பெற அனுப்பப்பட்டதை, கடந்த 07/09/2018-ம் தேதி VPM -BIOL/289/2018 சில்க் இன் கிரீன் பிளவுஸ் என்பதில் ரத்தம் இருந்ததற்கான அறிக்கை பெறப்பட்டுள்ளது. அது அ.சா.ஆ.29 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03/10/2018-ம் தேதி அன்று பெறப்பட்ட VPM-BIOL/344/2018 குருதியியல் ஆய்வறிக்கையில் ரத்தக்கறை இருந்ததாக அறிக்கை பெறப்பட்டுள்ளது. அந்த அறிக்கை அ.சா.ஆ. 30 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை மேற்கொண்டு ஆவணங்களை குறியீடு செய்வதற்காக ஒத்திவைக்கப்படுகிறது.**